# சேர். செய்யித் அகமத்கான்
# இந்திய முஸ்லிம் தேசியவாதத்தின் தொடக்கம்

எம். எஸ். எம். அனஸ்

> செய்யித் அகமதின் சீர்திருத்தம், சமூகம், சமயம் என்பவற்றுடன் நின்றுவிடவில்லை. முஸ்லிம்களின் அரசியலில் குறிப்பிடத்தக்க திருப்பத்தை அவர் ஏற்படுத்தினார்.
>
> — ஆர். சி. மஜும்தார்

இந்தியாவின் ஐக்கியத்தையும் நலனையும் ஒரு காலத்தில் தன் இலட்சியமாகக் கொண்டிருந்த சேர். செய்யித் அகமத்கான் பின்னர் முஸ்லிம்களின் அரசியற் போக்கையும் கல்வி எழுச்சியையும் ஹிந்துக்களின் அரசியல், கல்வி எழுச்சிகளில் இருந்து வேறுபடுத்தி வளர்த்தமைக்குரிய காரணங்களை அறிவது கடினமான பணியே.

'ஹிந்துவும் முஸ்லிமும் இந்தியாவின் இருகண்கள்' என்றும் இந்தியச் சட்டசபைகளில் பிரித்தானியர் மட்டுமே இடம் பெற்றிருந்த போது சட்டசபைகளில் இந்தியனின் குரல் ஒலிக்க வேண்டும் என்றும் குரல் எழுப்பிய அவர்தான் முஹம்மதலி ஜின்னாவுக்கு முன்னரே இந்திய முஸ்லிம்களைத் தேசிய இனத்தவரெனச் சுட்டிக் காட்டியவர் என்பது ஆச்சரியத்துக்குரியதே. முஸ்லிம்களிடையே தாமொரு தனி இனத்தவர் என்ற உணர்வை ஏற்படுத்தி அவர்களுக்கெனத் தனி அரசியல் போக்கினை உருவாக்கித்தந்ததன் மூலம் இந்தியா இரண்டுபடச் செய்யித் காரணமானார் என்பது உண்மையாக இருக்கலாம். அதனால் அவர் இந்தியாவின் எதிரி என்றும் ஏகாதிபத்தியத்தின் ஏவலாள் என்றும் குறை கூறுவது பொருத்தமற்றது. பிராமண ஹிந்துக்களில் பலர் வெள்ளை நிறத்தவருடன் தங்கள் ஆரியத்தன்மையை இனங்கண்டு பெருமிதங் கொண்டிருந்தபோது பிரித்தானியருக்கெதிரான கருத்துக்களை இந்தியாவின் சார்பில் முன்வைத்த பெரியார் அவர்.

## தேசிய காங்கிரஸிற்கெதிராக செய்யித் அகமத்கான்

> இந்திய மக்களின் பெயரில் காங்கிரஸ் இந்தியாவை ஆளப் பார்க்கிறது. ஆனால் முஸ்லிம்கள் சிறுபான்மையினர் நிராதரவானவர்கள்.
>
> — செய்யித் அகமத்

முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சியிலும் முஸ்லிம்களுக்கெதிரான ஆங்கிலேயரின் பகைமையின் வேகத்தைக் குறைப்பதிலும் கரிசனை

காட்டிய சேர் செய்யித் இவ்விரு முயற்சிகளிலும் முஸ்லிம்கள் முழு வெற்றியடைவதாயின் பொதுவாக எந்த அரசியல் இயக்கத்திலும் அவர்கள் சேர்வது தவிர்க்கப்பட வேண்டும் என்று கருதினர்.

மேலும் பெரும்பான்மை ஆட்சியின்மீது அவருக்குத் தீராத சந்தேகமிருந்தது. இந்திய காங்கிரஸ் 'தேசிய வாதம்' என்ற போர்வையில் பெரும்பான்மை ஆட்சியை முஸ்லிம்கள் மீது திணிக்க முயல்கிறது என்பதை அவர் ஒளிவுமறைவின்றிக் கூறினர்.

1887, 1888 களில் லக்னோவிலும் மீரத்திலும் அவர். ஆற்றிய சொற்பொழிவுகள் அவரது அரசியல் பாதையைத் தெளிவுபடுத்தின. காங்கிரஸிலிருந்து முஸ்லிம்களைப் பிரித்துவிடுவது பற்றிய தீவிரக் கருத்துக்கள் அச்சொற்பொழிவுகளில் இடம்பெற்றிருந்தன. 1888 இல் லக்னோ பேச்சில்,

> ... எனது கவனம் முழுவதும் முஸ்லிம்களின் கல்விபற்றித் தான். ஆனால், எனது முஸ்லிம் சகோதரர்களுக்கு எனது அபிப்பிராயம் என்ன என்பதைச் சொல்ல நிர்ப்பந்திக்கும் சூழ்நிலை உருவாகிவிட்டதென நினைக்கிறேன் என அவர் குறிப்பிட்டார்.

வழமையான தொனியிலிருந்து வேறுபட்டிருந்த அவரின் இப் பேச்சு இந்திய அரசியல் அரங்கில் அதிர்ச்சியூட்டுவதாய் அமைந்தது. செய்யித் அகமதுகானில் பெருமதிப்புக் கொண்டிருந்தோர் திடுக்குற்றனர்.

> சிறு வயதிலிருந்தே தங்களில் நான் மரியாதை கொள்ளவே போதிக்கப்பட்டிருந்தேன்... தங்களின் பேச்சுக்களையும் எழுத்துக்களையும் புனிதம் நிறைந்ததாக எம் வீடுகளில் நாம் பாதுகாத்து வந்தோம்... ஆனால் காங்கிரஸ் பற்றிய தற்போதைய உங்கள் பேச்சுக்கள் எனக்கு நம்பமுடியாதனவாக உள்ளன.[2]

என்று லாலாலஜபதிராய் செய்யிதிற்கு எழுதிய பகிரங்கக் கடிதத்தில் குறிப்பிட்டார். செய்யிதின் பேச்சுக்கள் அத்தகையதொரு மாற்றத்தைப் பெற்றிருந்தன.

> 'தேசிய காங்கிரஸ்' என்ற சொல்லை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. பல்வேறு இனத்தையும் சாதியையும் கொண்ட நாடு எவ்வாறு ஒரு தேசமாவது? அவர்களது நோக்கங்களும் அபிலாஷைகளும் ஒன்றுகிவிட்டதையா அது குறிக்கிறது. அவ்வாறில்லையெனில் 'தேசிய காங்கிரஸ்' என்பது சாத்தியமில்லை. சகல மக்களுக்குமான சமநலனைக் காங்கிரஸால் வழங்கமுடியாது. "தேசிய காங்கிரஸ்" குறிப்பாக எனது சமூ

> சுத்திற்குத் தீங்கானது மட்டுமல்ல முழு அளவில் இந்தியாவுக்கே அது தீமையானது.[3]

என்று காங்கிரஸை அவர் பகிரங்கமாக விமர்சித்தார். முஸ்லிம்கள் காங்கிரஸில் சேரவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டபோது சட்டசபை, நகரசபை, மாவட்டசபை ஆகிய எல்லா அரசியல், நிர்வாக மட்டங்களிலும் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சமத்துவ அங்கத்துவம் வழங்குவதானால் மட்டுமே முஸ்லிம்கள் காங்கிரஸில் சேர்வதுபற்றி யோசிக்கமுடியும் என்று முடிவாகக் கூறிவிட்டார்.

அகமத்கானின் அரசியற் கருத்துக்கள் முஸ்லிம்களைக் காங்கிரஸிற்கு எதிராகத் திருப்பின. சென்னை, லாகூர், மீரத், லக்னோ முதலிய இடங்களில் எதிர்ப்புத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 'த முஸ்லிம் ஹரோல்ட்' முதலிய பத்திரிகைகள் காங்கிரஸிற்கு எதிரான கருத்துக்களைப் பிரசுரித்தன. 'ஆங்கிலோ கிழைத்தேசச் சங்கம்' போன்ற இயக்கங்களை ஆரம்பித்துச் செய்யித் காங்கிரஸ் எதிர்ப்புப் பணியில் ஈடுபட்டார்.

இந்த முயற்சிகளால் முஸ்லிம்கள் காங்கிரஸில் சேருவதைத் தவிர்த்துக் கொண்டனர். முழுமனதோடு காங்கிரஸை ஆதரித்த பதுருத்தீன் தைப்ஜீ, நவாப் செய்யித்முஹம்மத் முதலிய முஸ்லிம் தலைவர்கள் இருந்தனர் ரெனினும் அவர்கள் சிறுதொகையினரே என்று குறிப்பிடப்படுகிறது. 1888 இல் ஹியூம் என்பாருக்கு அனுப்பிய கடிதத்தில் தைப்ஜீ பின்வருமாறு எழுதினூர்:

> முஸ்லிம்கள் இருகூருகப் பிரிந்துவிட்டார்கள். அவர்களின் இடைவெளி நாளுக்கு நாள் அதிகரித்தே வருகிறது.[4]

காங்கிரஸிலிருந்து ஒருதொகை முஸ்லிம்களைப் பெயர்த்தெடுக்க அகமத்கானுல் முடிந்தது என்று ஆர். சி. மஜூம்தார் கூறுவது இங்கு நோக்கத்தக்கது.[5] அவரது சமய, சமூக சீர்திருத்தங்களை எதிர்த்தவர்கள் கூட அவரது அரசியல் கருத்துக்களை மதித்தனர்.

> எவ்வித முணுமுணுப்புமின்றி முழு முஸ்லிம் சமூகமும் அவரது அரசியல் தலைமையை ஏற்றுக்கொண்டது.[6]

என மௌலானு முஹம்மதலி கூறுகிருர்கள். 1858 முதல் 1898 வரை முஸ்லிம்களின் எல்லா அரசியல் இயக்கங்களுக்கும் சேர். செய்யித் அகமத்கானே நடுநாயகமாக விளங்கிவந்தார்.[7]

## பிரதிநிதித்துவ ஆட்சிக்கு எதிராக செய்தி

காங்கிரஸிற்கு எதிராக அவர் முன்வைத்த வாதங்களில் பிரதி நிதித்துவ ஆட்சிக்கு எதிரான அவரது கண்டனங்கள் முக்கிய மானவை. பல்லினங்கள் வாழும் இந்திய நாட்டிற்கு பிரதிநிதித்துவ ஆட்சி நேர்மையானதாக அமையாதென்றும் இந்தியாவில் பெரும் பான்மை ஆட்சி ஹிந்துக்களின் ஆதிக்கமாகவே முடியும் என்றும் அவர் கருத்து வெளியிட்டார். மேலும் கல்வியறிவில் மிகப்பெரும் ஏற்றத்தாழ்வினைக் கொண்ட இந்தியாவில் ஜனநாயக ஆட்சிமுறையை புகுத்தும்போது ஜனநாயகத்தின் உண்மையான பலன்களை கல்வி யறிவுள்ள சிறு கூட்டத்தினரே அனுபவிக்கநேரும் என்ற அச்சத்தை யும் அவர் வெளியிட்டார்.

பிரதிநிதித்துவ ஆட்சியின் குறைபாடுகளையிட்டு அவர் இவ்வாறு கூறினர்.

> இந்தியாவின் எப்பகுதியிலும் பிரதிநிதித்துவ முறையை... அதன் பூரண நோக்கத்தில் அனுஷ்டிக்க முடியாதென்பதை நான் நன்கறிந்திருக்கின்றேன்... ஆங்கிலேயரிடமிருந்து நாம் பிரதிநிதித்துவ ஆட்சிமுறையை சுவீகரிக்கும்போது சமூக அரசியல் விடயங்களில் இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்குமுள்ள முக்கிய வேறுபாடுகளை மறந்துவிடக்கூடாது.[8]

என எச்சரித்தார். நூற்றாண்டுகளாக கொடுங்கோன்மையும் ஒழுங் கீன ஆட்சியும் ஜாதி வித்தியாசமும் மதப்பகைமையும் கொண்ட நாட்டில் ஜனநாயகம் சிறந்த முறையில் செயல்பட முடியாதென்றர். பெரும்பான்மையினரின் கையிலேயே ஆட்சி அதிகாரம் போய்ச் சேரும் ஒருமுறையினுல் முஸ்லிம்கள் நன்மைபெற முடியாதென்பதே அவருடைய இறுதியான கருத்தாகும். அவர் சொன்னர்

> ...பிரதிநிதித்துவ முறை எனப்படுவது பெரும்பான்மைச் சமூ கத்தின் நன்மைகளையும் நோக்கங்களையும் வெளிக்காட்டுவ தாகும் – பெரும்பான்மைச் சமூகத்தினர் சிறுபான்மையினரின் நன்மைகளைக் காற்றில் பறக்கவிட்டுவிடுவார்கள்.[9]

வரலாற்று முக்கியத்துவமிக்க இந்த சொற்பொழிவில் இந்தியப் பிரி வினைக்குரல் தொனித்தது. காங்கிரஸ்யோரும் ஆட்சிமுறை முஸ்லிம் களுக்கு ஆபத்தானது என்பதே அவருடைய வாதத்தின் சுருக்க மெனலாம். முஹமதிய கல்வி மாநாட்டு விழாவில் இக்கருத்தை அவர் வெளியிட்டார்.

ஒருமடங்கு முஸ்லிம்களும் நாலுமடங்கு ஹிந்துக்களுமுள்ள இந்தியாவுக்கு இது பொருந்தாது.[10]

மிகப்பெரிய ஹிந்து சமுதாயம் மிகச்சிறிய முஸ்லிம் சமுதாயத்தின் நலன்களை ஒதுக்கித் தள்ளக்கூடும் என்ற பயத்தை அவர் வெளிப்படையாகவே தெரிவித்தார்.[11] அகமத்கானின் காங்கிரஸ் எதிர்ப்பு இரு நாட்டுக்கொள்கைக்கும் இனரீதியான அரசியலுக்கும் வித்திட்டது என்பதில் ஐயமில்லை என மஜூம்தார் முதலிய வரலாற்றுசிரியர் கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

## நாட்டினம்

நீண்ட காலமாக இந்தியாவில் 'ஹிந்து', 'முஸ்லிம்' என்பது சமய வேறுபாட்டை மட்டும் காட்டுவதே. காங்கிரஸின் தோற்றத்தோடும் செய்யிதின் அரசியற் பிரவேசத்தோடும் 'ஹிந்து', 'முஸ்லிம்' இருவேறு நாட்டினத்தவரைக் குறிக்கும் சொற்களாக வளர்ச்சி பெற்றன.

1885 வரை செய்யித் 'தேசியம்' அல்லது 'நாட்டினம்' பற்றி திட்டமான கருத்துக்களைக் கொண்டிருக்கவில்லை அவர் 'நாட்டினம்' பற்றிப் பல அர்த்தங்களில் பேசியிருந்துள்ளார். முழுமனிதகுலமும் ஒரு நாட்டினம் என்றோ ஒருநாட்டில் வாழும் எல்லா மக்களும் ஒரு நாட்டினத்தவர் என்றோ அவர் குறிப்பிட்டுள்ளார். காங்கிரஸ் தாபிக்கப்பட்டதன் பின்னர்தான் 'நாட்டினம்' பற்றிய திட்டமான கண்ணோட்டத்திற்கு அவர் வந்தார். செய்யித் முஸ்லிம்களை 'நாட்டினம்' என்னும் பொருள்படும் 'குவாம்' (Quam) என்ற உருதுச் சொல்லால் அழைத்தார். முஸ்லிம்கள் ஒரு தனித்தேசிய இனம் என்று ஜின்னா அழைக்குமுன்பே செய்யித் அக்காரியத்தை நிறை வேற்றிவிட்டார்.

## செய்யிதின் தேசபக்தி

ஒருகாலத்தில் செய்யித் மிகச்சிறந்த தேசபக்தராகப் போற்றப்பட்டார்.

> ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒரே தேசிய இனத்தவரே. அவர்கள் சுவாசிப்பது ஒரே காற்று அவர்கள் பருகுவதும் ஒரே ஜமுனாவின் நீர். அவர்கள் பிறப்பதும் இறப்பதும் ஒரே மண்ணில்.[12]

என்று செய்யித் தேசிய ஐக்கியத்தை வலியுறுத்தியவர். தேசிய மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு 1885 இல் எஸ். என். பானர்ஜி செய்யிதிற்கு எழுதிய கடிதத்தில் ''தேசப்பிரதிநிதிகள் கொண்ட எந்தச் சபையும் உங்கள் பிரசன்னமின்றி எந்தவிதத்திலும் பூரணத்துவம்

பெருகு"[13] என்று குறிப்பிட்டது வெறும் ஒப்பாசார வாசகமன்று. ஏனெனில், சட்டசபையில் இந்தியன் இடம் பெறவேண்டியதன் அவசியத்தை "இந்தியக் கிளர்ச்சிக்கான காரணங்கள்" (The Causes of the Indian Revolt) என்ற சிறுநூலில் 1857 லேயே வலியுறுத்தியிருந்தார். 1857 கலவரம் ஏற்படக் காரணமாயிருந்தவைகளில் ஒன்று இந்தியர் சட்டசபைகளில் இடம்பெறாமையே என்பதை அவர் அதில் எடுத்துக்காட்டியிருந்தார். இந்தியன் ஒருவனுல் எழுதப்பட்ட முதல் அரசியற் சிறுநூலும் அதுவேதான் என்பதும் இங்கு கவனிக்கத் தக்கது.[14] லாலாலஜபதிராய் செய்யிதின் முற்போக்கான அரசியற் கருத்துக்களைப்பற்றி நினைவுகூரும்போது "அவை உயரிந்த முறையில் பேசப்பட்ட உன்னத வார்த்தைகள்"[15] என வர்ணிக்கிறர். ஆனல் அதே செய்யித் அகமத்கான் காங்கிரஸிற்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தியமையும் முஸ்லிம்களை 'தனி நாட்டினமாக' உணரச்செய்தமையும் கவனமாக ஆராயவேண்டியவை. மேலோட்டமான தெனினும் பின்வரும் காரணங்களை கவனத்திற் கொள்ளாதிருக்க முடியாது.

## ஹிந்துதேசியவாதம்

பெரும்பான்மை ஆட்சியை ஆதரித்தோர் 'தேசியவாதம்' என்ற சித்தாந்தத்தை பரந்த கண்ணேட்டம் என முன்வைத்த போதும் சாராம்சத்தில் அது "ஹிந்துத் தேசியவாதமே" என்பதை செய்யித் நன்கறிந்திருந்தார். காங்கிரஸின் அக்காலத்திய தலைவர்களில் பலர் தமது கருத்துக்களாலும் நடவடிக்கைகளாலும் இதை நிரூபித்து வந்தனர். இவர்களில் சிலர் ஹிந்து மறுமலர்ச்சிவாதிகள். சிலர் முஸ்லிம் எதிர்ப்பாளர்கள். "பெரும்பான்மை ஆட்சி என்ற போர்வையில் தேசியவாதம் பேசியோர் இவர்களே."[16] ஏ. பி. ராஜ்புத் என்பாரின் கருத்தும் "இந்திய தேசியவாதம் சாராம்சத்தில் ஹிந்து தேசியவாதமே"[17] என்ற கே. கே. அஸீஸின் கருத்தும் இப்போதைக்கு இதை உணர்த்தப் போதுமானவை. இந்திய மண்ணில் தீவிர ஹிந்து தேசிய வாதம் வேரூன்றி வருவதையிட்டு சேர். செய்யித் சிறுபான்மையினருக்கே உரிய இயல்போடு பீதியுற்ருர் போலும்.

ஹிந்து சமய கலாச்சார எழுச்சி 1885 இல் காங்கிரஸின் தோற்றத்தின்பின் நிகழ்ந்தது அல்ல. ஹிந்து புத்துயிர்ப்பு வாதம் இதற்குப் பல தசாப்தங்களுக்கு முன்னரே ஆரம்பமாகியிருந்தது. ஹிந்துக்களின் ஆங்கிலக் கல்வி வளர்ச்சிக்கு அத்திவாரமாயமைந்த ராஜாராம் மோகன்ராயின் கல்லூரிக்கு 'ஹிந்துக் கல்லூரி' (1817) என்றே பெயரிடப்பட்டது. 1875, 1880 களில் ஹிந்து மதக் கோட்பாட்டையைந்த தேசிய இயக்கங்கள் எழுச்சி பெற்றன. பிரசித்தி பெற்ற 'ஆரிய சமாஜம்' இஸ்லாத்திற்கு எதிரான பிரச்சாரத்தையும் தொடங்கி இருந்தது. இன்னெருபுறம் மொழிப்பிரச்சினையும் உருவெடுத்திருந்தது. முஸ்லிம்களின் உருதுமொழி அதன் செல்வாக்கை இழக்கத்தொடங்கியது. ஹிந்துக்கள் ஹிந்தி மொழியை உருதுவின்

இடத்திற்கு கொண்டுவருவதில் அயராதுழைத்தனர். மேலும் ஹிந்தியை அரபிலிபியில் எழுதுவதற்குப் பதிலாக தேவநாகிரி லிபியில் எழுதும் பழக்கத்தையும் ஹிந்துக்கள் அறிமுகம் செய்தனர். இவ்வாறு இந்திய முஸ்லிம்கள் மனத்துயர் கொள்ளும் நிகழ்ச்சிகள் நிறைவேறிக் கொண்டிருந்த போதும் செய்யித் அகமத் இதுவெல்லாம் பாதிக்கப் பட்டதாகத் தெரியவில்லை.

ஹிந்துப் பெரும்பான்மையினர் அரசியல் ஆதிக்கம்பெற ஆயத்தமான காலத்திலேயே சேர். செய்யித் அகமத் தன் தாக்குதல்களைத் தொடங்கினர். முஸ்லிம்களின் நலன்கள் சிறுபான்மையினர் என்ற காரணத்தால் முற்றாக மூழ்கடிக்கப்பட்டுவிடும் என்று அவர் பயந்தார். முஸ்லிம்கள் அரசியல் நிர்வாக ஆதிக்கங்களில் இரண்டாம் பட்சமாய் ஒதுங்கியிருக்க நேரும் என்பதை அவரால் கற்பனை செய்யவும் முடியாமலிருந்தது.

எதிர்க்கவேண்டுமெனக் காங்கிரஸ் கொள்கையை எதிர்த்தார் என்றும் ஆங்கிலேயரின் அடிவருடியாய் செய்யித் செயல்பட்டார் என்றும் 'பெக்கு' என்ற ஆங்கிலேயரின் செல்வாக்கிற்குப் பணிந்து விட்டார் என்றும் அவர்மீது பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. பிரித்தாளும் ஆங்கிலேயத் தந்திரம் எப்போதேனும் செய்திதைப் பாதித்திருக்கமுடியும். ஆனல், அதன் பொருள் அவர் ஆங்கிலேயனின் கைப்பொம்மையானர் என்பதல்ல செய்யித் அகமதின் காங்கிரஸ் எதிர்ப்பானது நிலமையைப் பொறுத்த சுயமதிப்பீடே ஆகும்.[18] மேற்சொன்ன குற்றச்சாட்டுகளுக்கு அவரை ஆளாக்குவது அவரது அரசியல் சிந்தனைகளை நிராகரிப்பதாகும். அலிகார் கல்லூரி அதிபர் பெக்*குவையும் ஏனைய ஆங்கிலேயரையும் காணுமுன்பே அவரது அரசியற் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுவிட்டன. அவற்றிற்சில பின்வருமாறு:

- பாராளுமன்ற முறை இந்தியாவுக்குப் பொருந்தாது (1858).
- இரண்டு போராடும் இனங்களை (ஹிந்து - முஸ்லிம்) ஒரேபடைப் பிரிவில் வைத்திருப்பது அரசின் கண்மூடித்தனமான செயலாகும் (1858).
- இரு இனங்களுக்குமிடையிலான வேறுபாடுகள் அதிகமானவை (1872).
- முஸ்லிம்களின் அரசியல் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாக்கும் சங்கங்களை ஏற்கனவே தாபித்திருந்தார். 'முகமதிய அரசியற் சங்கம் (1883).[19]

எனவே பிரித்தானியரின் செல்வாக்கினால் செய்யித் காங்கிரஸ் எதிர்ப்பாளரானார் என்பது நன்கு பரிசீலிக்கப்பட வேண்டியது. அவரது நேர்மையும் தேச விஸ்வாசமும் ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு நிலை போகக் கூடியதல்ல.

> காங்கிரஸ் காரர்களும் ஏன் சில தலைவர்களும் செய்யித் தான் பிறந்தநாட்டிற்கு வஞ்சம் செய்யும் துரோகி என்று கூறிவந்தனர். இதன் மூலம் அவர்கள் நிராகரித்தது ஒரு மனிதனையும் அவனது இணையற்ற சேவைகளையும் மட்டுமல்ல ஒரு உண்மை தேசபக்தனையே அவர்கள் நிராகரித்துவிட்டனர்.[20]

என மௌலானா முஹம்மதலி மனம்நொந்து கூறினார். செய்யித். ஹிந்து பெரும்பான்மை வாதத்துக்கு எதிராகக் கிளர்ந்தது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை அவர் ஹிந்துக்களின் மிகச்சிறந்த நண்பர் என்பதும். செய்யித்பற்றி ஜவாஹர்லால் நேரு குறிப்பிட்டது இங்கு நினைவு கூரத்தக்கது.

> அவர் ஹிந்து எதிர்ப்பாளரோ இனப் பிரிவினைவாதியோ அல்ல சமய வேறுபாடுகள் அரசியல் அல்லது தேசியப்பிரச்சினைகளில் முக்கியத்துவம் பெறக்கூடாது என அவர் பேசினார்.[21]

ஆர். சி. மஜும்தார் இவ்வாறு கூறுகிறார்.

> அவர் ஒரு தீவிர முஸ்லிம் ஆதரவாளர் என்பதிலும் அவர் ஒரு தீவிர ஹிந்து எதிர்ப்பாளர் என்பதும் சரியான தீர்ப்பன்று. அவர் ஹிந்துக்களைக் குறைவாய் நேசித்தார் என்பதுமல்ல முஸ்லிம்களை அதிகமாய் நேசித்தார் என்பதுமல்ல. முஸ்லிம்களின் நலனைப் பேணிவளர்ப்பதே அவர் வாழ்வின் ஒரே குறிக்கோள்.[22]

தேசியத்தின் பேரிலோ இன ஐக்கியத்தின் பேரிலோ தனது சொந்த இனத்தின் நலனைப் பலியாக்க விரும்பாத கர்மவீரர் அவர். இந்திய வாழ்வுபற்றிய அவரது கண்ணோட்டமும் அவரது நீண்டகால அரசியல் அனுபவமும் காங்கிரஸோடு இணக்கத்திற்கு வரமுடியாத எதிரியாகவே அவரை வளர்த்தன போலும்.

> செய்யித் அகமதின் அரசியற் சிந்தனை அவரது அரசியல் அனுபவத்தினதும் தற்கால இந்திய வாழ்வினதும் அதன் பிரச்சினைகளதும் அடிப்படையினைக் கவனமாகவும் யதார்த்தமாகவும் அணுகியதன் விளைவே.[23]

ஆயினும் செய்யித் அகமதிற்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் செய்யித் அகமதின் முகத்தின் மீதே வீசி யெறியப்பட்டவை. அந்த கம்பீர

மான தேசபக்தனின் ஆன்மாவை அவை போதுமானவரை துயர் செய்தன. மரணத்திற்குச் சற்று முன் அவர் ஷேக் அப்துல்லாவுக்கு எழுதிய கடிதத்தில் மிகுந்த விசனத்தோடு அக் குற்றச்சாட்டுக்களுக்கும் அவர் பதில் கூறியிருந்தார். முஸ்லிம்களின் நலனுக்காகவும் பெரும்பான்மை ஆதிக்கம் ஒழிக்கப்படவேண்டும் என்பதற்காகவும் தனது சொந்த அபிப்பிராயத்தின்படியே காங்கிரஸை எதிர்த்ததாக அதில் அவர் கூறுகிறார்.

> ஆங்கிலேயரைப் பிரீதி செய்யவே காங்கிரஸை நான் எதிர்த்தேன் என்று இப்பொழுதோ அல்லது எனது மரணத்தின் பின்னரோ யாராவது கூறக்கூடுமாயின் அது தவறான அபிப்பிராயம் என்பதற்கு நீங்கள் சாட்சியாய் இருங்கள். எனது காங்கிரஸ் எதிர்ப்பானது எனது உண்மையான தனிப்பட்ட அபிப்பிராயமேயன்றி எவரையும் முகஸ்துதி செய்வதற்காக எழுந்த ஆசையின் உந்துதல் அல்ல. நான் காங்கிரஸின் கண்ணோட்டத்திற்கு மாறுபடுகிறேன். ஏனெனில் பிரித்தானியருக்குப் பின்வரும் பெரும்பான்மை ஆட்சி முஸ்லிம்களைப் பொறுத்தவரை விஷத்திற்கு ஒப்பானது. ...முஸ்லிம்களின் நலனுக்கு எல்லாமே எதிராக உள்ளன... இதை எவ்வாறு நான் ஆதரிப்பது? இந்த நிலையிலும் காங்கிரஸை நான் ஆதரிப்பேனாயின் அது முஸ்லிம்களை நானே கொலைசெய்வதற்கு ஒப்பாகும்.[24]

## அடிக்குறிப்புக்கள்

1. K. A. Nizami, *Sayyid Ahamad Khan*, Publication Division, Delhi, 1966 P. 140
2. *Ibid.*, PP. 140, 141
3. Syed Sharifuddin Pirzada, *Evolution of Pakistan*, Lahore, 1963, P. 51
4. S. K. Mittal, "Muslim attitued towards Indian National Congress 1885 - 1900". *Journal of Indian History*, April 1976, Vol. Liv. P. 207
5. R. C. Majumdar, *History of the Freedom Movement in India* Calcutta, 1962, Vol I P. 486
6. Afzal Iqbal (Ed), *Select Writings and Speeches of Maulan, Mohamed Ali*, Lahore, 1944, P. 252
7. முகம்மது நுஃமான், முஸ்லிம் இந்தியர், முஹம்மதுஹுஸைன், மொ.பெ., கொழும்பு, 1977 ப. 80
8. அ - நூ. ப. 83

9. அ - நூ., ப. 84
10. S. H. Pirzada, *Lcc cit*
11. மஜூம்தாரும் ஏனையோரும், இந்தியாவின் சிறப்பு வரலாறு, தமிழ் நாடு, 1971 ப. 421
12. K. A. Nizami, *Op. cit* P. 144
13. *Ibid.,* P.
14. *Ibid.,* P. 128
15. *Ibid.,* P. 133
16. A B. Rajput, *Muslim League yesterday and today*, Lahore, 1948. P. 16
17. K. K. Aziz, *The Making of Pakistan*, London, 1967. P. 79
18. M. S. Jain, *The Aligarh Movement its Origin and development* - (1858 - 1906) Agra, 1965, P. 143
19. *Ibid.,* P. 114
20. Afzal Iqbal *Op cit* P. 4
21. Jawaharlal Nehru, *The Discovery of India*, Calcutta, 1947. P. 287
22. R. C. Majumdar, *Op cit* P. 492
23. K. A. Nizami, *Op cit* P. 128
24. Shafique Ali Khan, *Two Nation theory as a concept Strategy and Ideology*, Hydrapad, P. 348